# Charge sheet of the High Court Ampara

Attorney Generals
Ref. No: CN/117/99

Criminal Case of the High Court
No: 383/2000

The Democratic Socialist Republic of Sri Lanka

01. Aboobucker Abdul Majeed Mohamed Nawfer Alias Ranees

Under the directions of the Attorney General of the Democratic Socialist Republic of Sri Lanka Hon. Kanthappah Chinniah Kamalasabesan, this charge sheet is filed. The criminal act on this charge sheet is as follows:-

On the 22nd of December or thereabouts, in the village off Maruthamunai that is under the jurisdiction of this court, the defendant has caused grievous hurt to Yoosuflebbe Abdul Razak. Further, whilst causing such grievous hurt, if the defendant intentionally caused the death of Yoosuflebbe Abdul Razak, the defendant could be charged for murder.

As per criminal code Para 300, the defendant is liable to be accused of murder and be liable to be punished for murder as per the said code.

2000- 03 10

Sgd
Advocate appearing for the state

Case No. HC/AMP/383/2000 2000-07-14

Time. 10.45 a.m.

[Stenographer K.N. Janmaweera is keeping notes by short hand]

Attorney Abbas says:-

The defendant and the injured complainant are living in the same village. Both profess the religion of Islam. The defendant in this case is a member of a society of Ulamas who are in the majority of the village. The complainant is a member of a group run by an individual and is very small in number. Due to a difference of opinion, there existed a feeling of enmity between the majority group and the group led by an individual. This enmity has been progressing in the village. Thus there existed a sense of confrontation between the majority group and the minority group of which the complainant is a member. Whatever the actions that has occurred in this instant, the defendant wishes not to waste the time of this High Court of Justice and therefore pleads guilty to his actions. The defendant is unmarried; he has the responsibility of supporting his unmarried sister and old parents. If he is sentenced to serve a term in prison, his responsibility towards his unmarried sister and aged parents are in question. He therefore pleads lesser punishment. Further, the defendant is under the employ of an individual bus owner as a Driver, whilst in his job met with an accident that had incapacitated him from continuing with his job. As he has no previous convictions I plead that these be considered and a lesser punishment be meted out. I ask the honoured court he be given a lesser punishment.

## **ORDER**

I have taken note of the proceeding of this honoured court. From the proceedings, it is very clear that the defendant and the complainant have had no personal enmity amongst them. There exist two groups having different view points as regards the Islamic religion in the village. This has brought about many conflicts. This has resulted in the use of guns and the complainant being a victim. Whatever be the case, forcing one's viewpoint to another is unacceptable. The defendant is a youth. He has not been convicted before. I order that the defendant pays a fine of Rupees Ten Thousand (10,000/-) to the complainant, and that this fine be paid by any day of last week of this month or before in four (04) instalments. Further, as per criminal code 303, the defendant hereby sentenced to six (06) months rigorous imprisonment, and this is suspended for five (05) years. The fine of Rupees Ten Thousand (Rs.10, 000/-) could be paid by instalments of Rupees Two Thousand (Rs. 2,000/-) failing which every failure of paying the instalment will necessitate his serving six (06) months rigorous imprisonment. The first instalment must be paid by 31st of August.

Sgd. Hon. K.P.S. Varatharajah
High Court Judge, Ampara
2000-07-14

This is a true copy of the proceeding of the case HC/AMP/2000 and the order of the court of the case.

Prepared.

Signed.

மேன் குற்றப்பத்திரம்
அம்பாறை நீதிமன்ற வலையத்தின்
உயர் நீதிமன்றம்

சட்டமாதிபரின்
இலக்கம் : CN/117/99

உயர் நீதிமன்றின்
குற்றவியல் வளக்கு
இலக்கம் : 383/2000

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
எதிராக

01. அபூபக்கர் அப்துல் மஜீத் மொஹமட் நவுபர் அல்லது றணீஸ்

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் சட்டமாதிபர் கௌரவ கந்தப்பர் சின்னையா கமலசபேசன் அவர்களது கட்டளைக்கு அமைவாக எதிராளிக்கு அதிகுற்றப்பத்திரத்தின்ன தாக்கல் செய்யப்படுகின்றது. அந்த அதிகுற்றச்சாட்டில் உள்ள குற்றங்களாவன பின்வருமாறு:-

1989 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மை தினமொன்றில் இந்த மன்றின் அதிகார எல்லைப் பகுதியில் அமைந்திருக்கும் மருதமுனை என்னும் இடத்தில் எதிராளியினால் யூசுப் லெப்பை அப்துல் றஸ்ஸாக் என்பவ்ருக்கு காயங்கள் ஏற்படுத்தியுள்ளார் என்றும்; அவ்வாறு செய்யும் போது எதிராளியின் மனதில் உள்ள எண்ணங்களுக்கும் சிந்தனைகளுக்கும் ஏற்ப இந்த செய்கையின் மூலமாக எதிராளி மேற்கூறிய யூசுப் லெப்பை அப்துல் றஸ்ஸாக் என்பவரது மரணத்தை ஏற்படுத்தியிருந்தால், எதிராளி கொலைக்குற்றத்திற்கு பாத்திரவாளியாக இருந்திருக்கக்கூடும். எனவே தண்டனை சட்டக் கோவையின் 300 ஆம் பந்திற்கு ஏற்ப தண்டனை பெறவேண்டிய கொலை செய்வதற்கான முயற்சியை மேற்கொண்ட குற்றத்தினைச் செய்துள்ளார் என்பதாகும்

கையொப்பம்
அரச தரப்பு சட்ட வாதி

2000.03.10 ம் திகதி

வளக்கு இலக்கம் :- HC/AMP/383/2000 2000.07.14

நேரம் :- மு.ப. 10:45

(சுருக்கெழுத்தாளர் K.N. ஜன்மவீர, இதிலிருந்து சுருக்கெழுத்து குறிப்புகளை பதிவு செய்கின்றார்)

சட்டத்தரணி ஜனாப் அப்பாஸ் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார் :-

இந்த எதிராளியும், காயத்திற்கு இலக்கான முறைப்பாட்டாளரும் ஒரே கிராமத்தில் வசித்து வருகின்றனர். இருவரும் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்கள். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எதிராளி அந்தக் கிராமத்தில் பெரும்பான்மையோர் அங்கத்துவம் வகிக்கும் ஒரு உலமா சபையைச் சேர்ந்த நபராக இருக்கின்றார். இந்த முறைப்பாட்டாளர்; இந்த கிராமத்தில் மிகவும் ஒரு சிறிய குழுவாக இயங்கும் தனி நபர் ஒருவருக்குரிய குழுவினது அங்கத்துவம் வகிக்கும் நபராக இருக்கின்றார். இந்தக் கிராமத்தில் ஏற்பட்டுள்ள சர்ச்சை தொடர்பாக கிராமத்தின் பெரும்பான்மைக் கட்சியும் (குழுவும்) தனி நபர் குழுவில் அங்கம் வகிக்கும் சிறிய தொகையையுடைய நபர்களுக்கும் இடையில் ஒரு பகைமை மனப்பான்மை வளர்ந்து வந்தது. இந்த எதிர்ப்பின் காரணமாக இந்த முறைப்பாட்டாளர் அடங்கிய குழு, கிராமத்தின் பெரும்பான்மை மக்கள் அங்கம் வகிக்கும் குழுவுடன் கசப்பு மனப்பான்மை நிலவியிருந்தது தெளிவாகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக நிகழ்ந்த சம்பவங்கள் எவ்வாறு இருப்பினும், இந்த எதிராளி இந்த மன்றின் நேரத்தினை விரையமாக்காமல்; தனக்கு வழங்கப்பட்ட முதற் சந்தர்ப்பத்திலேயே தான் செய்த குற்றத்தினை குற்றமாக ஏற்றுக் கொண்டுள்ளார். இந்த எதிராளி திருமணமாகாத ஒருவராக இருப்பதுடன் அவருடைய திருமணமாகாத சகோதரியையும், வயோதிப நிலையிலுள்ள பெற்றோரையும் கண்காணிக்கும் பொறுப்பு தனக்கு இருப்பதால் இந்த எதிராளிக்கு சிறைத்தண்டணையை விதித்தால், தனது வயோதிபப் பெற்றோர்களையும், திருமண வாழ்வை எதிர்பாத்துக் கொண்டிருக்கும் தனது சகோதரியின் நிலைப்பாடு ஒரு கேள்விக் குறியாகலாம் எனவும், மன்றின் முன்னிலையில் மன்றாட்டமாக எடுத்துரைத்தார்.

மேலும் இந்த நபர் ஒரு தனியார் பஸ்வண்டியில் சாரதியாக கடமை புரிபவராக இருக்கின்றார். அவ்வாறு கடமை புரிந்து கொண்டிருக்கையில்; ஏற்பட்ட ஒரு விபத்தின் காரணமாக, தனது காலொன்று முறிந்து போனபடியினால் மேலும் தனது தொழிலை மேற்கொள்ள முடியாத நிலையிலுள்ளார். இவருக்கு எதிராக முன்பு எந்தக் குற்றச்சாட்டும் இல்லாத காரணத்தினால், இதில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றி மேன்மைதங்கிய மன்றின் கவனத்தைச் செலுத்தி இந்த எதிராளிக்கு ஒரு இலகு தண்டனையை வழங்குமாறு கௌரவ மன்றிடம் மன்றாட்டமாக வேண்டிக்கொள்ளப் படுகின்றது.

கட்டளை

இரு தரப்பினரும் இந்தக் கௌரவ மன்றின் முன்வைத்த விடயங்களைக் கருத்திற் கொண்டு, இந்த வளக்கின் பின்னணியைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கும் போது இந்த எதிராளிக்கும் காயக்காரருக்கும் இடையில் எந்தவொரு தனிப்பட்ட கோபமும் இருக்கவில்லை என்பது நன்றாகப் புலப்படுகின்றது. இஸ்லாம் மதத்தினைப் பற்றி வெவ்வேறான கருத்துக்களையுடைய இரு குழுக்கள் இந்தக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதும், இவ்வாறு இரு கருத்து முரண்பாடுகளின் காரணமாக இரு தரப்புகளுக்கிடையே சர்ச்சைகள் தோன்றுவதாகவும் புலப்படுகிறது. இவ்வாறு ஏற்படும் கருத்து முரண்பாடுகளின் காரணமாக் தோன்றிய கலவரத்தினால் இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு, இந்த வளக்காளி காயங்களுக்குப் பாத்திரமாகியுள்ளார். எவ்வாறிருப்பினும் ஒரு சாரார் ஏற்றுக் கொண்டுள்ள கொள்கைகளை மற்றவொரு சாராருக்கு பலவந்தமாகத் திணிக்கப் போகும் செயலானது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத விடயமாக உள்ளது. எதிராளி ஒரு இளைஞராக இருக்கின்றார். இதற்கு முன்பு அவர் எந்தவொரு குற்றத்தையும் விளைவித்ததாகத் தெரியவில்லை.

எதிராளியினால் முறைப்பாட்டாளருக்கு ரூ. 10,000 நட்டஈடு வழங்கப்பட வேண்டுமென்றும்; இந்த நட்டஈட்டுப் பணத்தை மாதாந்தம் இறுதியில் வரும் கிழமை நாளொன்றிலாவது அதற்கு முன்னொரு தினத்திலோ இந்த மன்றிற்கு சமுகமளித்து 04 தவணையில் கட்டி முடித்துவிட வேண்டும். அத்துடன் குற்றத்தடுப்புச் சட்டக்கோவையின் 303 இற்கு ஏற்ப; 06 மாத கால கடூழிய சிறைத்தண்டனைக்கு தீர்ப்பு வழங்கப்படுவதுடன் அந்தத் தண்டனை இன்று தொடக்கம் 05 வருடத்திற்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டாளராகிய காயக்காரருக்கு வழங்கப்பட வேண்டிய ரூ. 10,000 இற்கான நட்டஈட்டுப் பணத்தை ரூ 2,000 தவணைப்பணமாகவோ, அல்லது அதன் பகுதிகளாகவோ கட்டத்தவறும் பட்சத்தில், அந்த ஒவ்வொரு தவணைக்காகவும் 06 மாத கால கடூழிய சிறைத்தண்டனையையும் வழங்குகின்றேன். 01ம் தவணைக் கட்டணத்தை ஆகஸ்ட் 31ம் திகதி செலுத்தப்படல் வேண்டும்.

கையொப்பம்
( கௌரவ K.P.S. வரதராஜா )
உயர் நீதிமன்ற நீதிபதி, அம்பாரை
2000.07.14

இதன் மேல் குறிப்பிடப்பட்டுள்ளது இல : HC/AMP/383/2000 வளக்குத் தீர்ப்பின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உண்மைப்பிரதி என்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

த்யாரித்தல் : சுருக்கொப்பம்
சரி பிழை பார்த்தல் : சுருக்கொப்பம்

கையொப்பம்
பதிவாளர்
பதவி முத்திரை

SEAL
24.06.2003

மொழிபெயர்ப்பு:-